மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 331, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

331—

தொழிற்பயிற்சி நிலையம்

***55711—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான நிலை தற்போது எழவில்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. பன்முகத் துறையிலும் தன் முகம் பதித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற உயரிய இலட்சியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

தமிழக அளவில் ஆத்தூர் தொகுதியில்தான் நெல் அறுவடை இயந்திரங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே, தொழிற்பயிற்சிப்

பாடப் பிரிவாவது தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 17 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 2,037 இருக்கைகளுடன் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றில், ஆத்தூர் தொகுதியைப் பொறுத்தமட்டில், 2 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய தொழில் பிரிவு தொடங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், இந்த நான்கு ஆண்டு காலத்தில் மட்டும், 25 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், 29 புதிய தொழில் பிரிவுகள் ரூபாய் 19.27 கோடி செலவில் தொடங்கப்பட்டிருக்கின்றன. சேலம் பகுதிக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக ஏ.சி. மெக்கானிக், வர்ணம் பூசுபவர் போன்ற பல்வேறு பிரிவுகளெல்லாம் தரப்பட்டிருக்கின்றன. நெல் அறுவடை செய்யக்கூடிய இயந்திரங்களுக்குண்டான பயிற்சி தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பயிற்சியைச் சேர்ப்பதற்கு ஆலோசனை செய்து, தேவைப்படின் சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் அந்தப் பயிற்சியைச் சேர்க்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, வருங்காலங்களில் செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நெல் அறுவடை இயந்திரத்திற்குண்டான தொழிற்பயிற்சிக்கான பாடப் பிரிவு தொடங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா

அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 332, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

332—

புதிய அங்கன்வாடி மையம்

***42080—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், ஆழ்வானேரி ஊராட்சி, புதுக்குறிச்சியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியம், ஆழ்வானேரி ஊராட்சியிலுள்ள புதுக்குறிச்சி கிராமத்தின் மக்கள் அனைவரும் அருகிலுள்ள ஆழ்வானேரியில் இயங்கிவரும் முதன்மை அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குழந்தைகள் வருகை அதிகமுள்ள இடங்களில் தேவைக்கேற்ப அங்கன்வாடி மையங்களைத் துவக்கிட வேண்டும் என்று ஆணையிட்டதன் அடிப்படையில், அங்கன்வாடி மையங்கள் சீரமைப்பின்கீழ், புதுக்குறிச்சியில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.